**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**

Ang Mo Kio Tamil Methodist Church

*27th ஜூலை / July 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு** Call to Worship | **திருமதி. ஜூலியட் நெல்சன்** Mrs. Juliet Nelson |
| **இறைவணக்கப்பாடல்** Introit | **பாடகர் குழு** Choir |
| **ஜெபம்** Prayer | **திருமதி. ஜூலியட் நெல்சன்** Mrs. Juliet Nelson |
| ✝ **தொடக்க பாடல்** Opening Song | **சபையார் இணைந்து** Congregation |

**தூய்மை பெற நாடு**

*1. தூய்மை பெற நாடு; கர்த்தர் பாதமே*
*நிலைத்தவர் வார்த்தை உட்கொள்ளென்றுமே;*
*கூடி பக்தரோடு சேர்ந்தோர் தாங்குவாய்,*
*யாவிலுமே தெய்வ தயை நாடுவாய்.*

*2. தூய்மை பெற நாடு; லோகக் கோஷ்டத்தில்*
*தனித்திரு நாளும் அவர் பாதத்தில்;*
*யேசுவைப்போலாவாய், நோக்கின் அவரை;*
*பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை.*

*3. தூய்மை பெற நாடு; கர்த்தர் நடத்த*
*என்ன நேரிட்டாலும் அவர்பின் செல்ல;*
*இன்பம் துன்பம் நேர்ந்தும் விடாய் அவரை,*
*நோக்கியவர் வாக்கில் வைப்பாய் நம்பிக்கை.*

*4. தூய்மை பெற நாடு; ஆத்மா அமர்ந்து*
*சிந்தை செய்கை யாவும் அவர்க்குட்பட்டு,*
*அன்பின் ஜீவ ஊற்றை சேர்ந்து ருசிக்க,*
*முற்றும் தூய்மையாவாய் விண்ணில் வசிக்க.*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் *30*ம் ஞாயிறு** "சங்கீதம் 96" | **சபையார் இணைந்து** Congregation |

"கர்த்தருக்கு புதுப்பாட்டைப் பாடுங்கள்"

Psalter Reading – "Psalm 96"

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி** Gloria Patri | **சபையார் இணைந்து** Congregation |
| **துதி ஆராதனை** Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்** Lord's Prayer | **சபையார் இணைந்து** Congregation |
| **சிறப்புப் பாடல்** Special Song | **பாடகர் குழு** Choir |
| ✝ **காணிக்கைப் பாடல்** Offertory Song | **சபையார் இணைந்து** Congregation |

**தேவனே, நான் உமதண்டையில்**

**தேவனே, நான் உமதண்டையில் – இன்னும் நெருங்கிச்**
**சேர்வதே என் ஆவல் பூமியில்**

**மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்**
**கோவே, தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை சேர்வேன்;**

*1. யாக்கோபைப்போல், போகும் பாதையில் - பொழுது பட்டு*
*இராவில் இருள் வந்து மூடிட,*
*தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என்*
*கனாவில் நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா!*

*2. பரத்துக்கேறும் படிகள் போலவே - என் பாதை தோன்றப்*
*பண்ணும் ஐயா, என்றன் தேவனே,*
*கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை*
*அருமையாய் என்னையழைக்கும் அன்பின் தூதராகச் செய்யும்*

*3. நித்திரையினின்று விழித்துக் காலை எழுந்து*
*கர்த்தாவே நான் உம்மைப் போற்றுவேன்;*
*இத்தரையில் உந்தன் வீடாய் என்துயர்க் கல் நாட்டுவேனே*
*என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்*

*4 ஆனந்தமாம் செட்டை விரித்துப் - பரவசமாய்*
*ஆகாயத்தில் ஏறிப் போயினும்*
*வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்,*
*மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ **<u>திருமறைப் பாடம்</u>** — **திரு. பாபி ராஜரத்தினம்**
<u>Scripture Reading</u> — Mr. Bobby Rajaratnam
***யாத்திராகமம் 18 : 14 – 26***
Exodus 18 : 14 - 26

**அருளுரை** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

**<u>தேவ சித்தம் நிறைவேற</u>**

**தேவ சித்தம் நிறைவேற என்னையும் ஒப்படைக்கிறேன்**
**தேவசத்தம் என்னுள்ளம் பலமாகத் தொனிக்குதே**

*1. முட்களுக்குள் மலர்கின்றதோர்*
*மக்களைக் கவரும் லீலி புஷ்பம்போல்*
*என்னையுமே தம் சாயலாய்*
*என்றென்றும் உருவாக்கு வார்*

*2. பொன்னைப் போல புடமிட்டாலும்*
*பொன்னாக விளங்குவேனென்றென்றுமே*
*திராணிக்கு மேல் சோதித்திடார்*
*தாங்கிட பெலனளிப்பார்*

*3. அத்திமரம் துளிர் விடாமல்*
*ஆஸ்திகள் அழிந்து நஷ்டம் வந்தாலும்*
*கர்த்தருக்குள் சந்தோஷமாய்*
*நித்தமும் மகிழ்ந்திருப்பேன்*

*4. நீதிமானை அனுதினமும்*
*சோதிக்க பல்வேறு துன்பம் வந்தும்*
*கர்த்தர் அன்பை விட்டு நீங்கா*
*சுத்தனாய் நிலைத்திருப்பேன்*

*5. முன்னறிந்து அழைத்தவரே*
*முன்னின்று நலமுடன் நடத்துவார்*
*சகலமும் நன்மைக்கென்றே*
*சாட்சியாய் முடித்திடுவார்*

*6. சோதனையை சகிப்பவனே*
*சாந்தமும் பொறுமையு முள்ளவனே*
*ஜீவக்கிரீடம் பெற்றிடுவான்*
*ஜோதியாய் பிரகாசிப்பான்*

*7. கஷ்டமெல்லாம் தொலையும் ஓர் நாள்*
*கண்ணீரும் கவலையும் நீங்கும் அந்நாள்*
*இரட்டிப்பான பங்கைப் பெற*
*இரட்சகர் அழைத்திடுவார்.*

**அறிவிப்புகள்**
Announcements

✝ ***<u>மனப்பாட வசனம்</u>*** — **சபையார் இணைந்து**
<u>Memory Verse</u> — Congregation
***யோவான் 17 : 17 - 18***
John 17 : 17 – 18
***17. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்;***
***உம்முடைய வசனமே சத்தியம்.***
***18. நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை***
***உலகத்தில் அனுப்புகிறேன்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing